**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண். 103/2017**

**வாக்குமூலம்: வா.சா.2 – அழகுமலை**

**06.08.2026 : சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் எதற்காக யாருக்கு ஆதரவாக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் வாதிக்கு ஆதரவாக சாட்யம் அளிக்க வந்துள்ளேன். நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. நான் தற்சமயம் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் பெருமாள்புதுாரில் குடியிருந்து வருகிறேன். நான் சென்னையிலிருந்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எவ்வளவு காலமாக சென்னையில் வசித்து வருகிறேன் என்றால் 2 வருடங்களாக வசித்து வருகிறேன். வாதி எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வாதி வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதி வீடு எந்த திசையை பார்த்து உள்ளது என்றால் வடக்கு பார்த்து அமைந்துள்ளது.

2. வாதி வீட்டிற்கும், பிரதிவாதி வீட்டிற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் வாதி வீட்டிற்கும், பிரதிவாதி வீட்டிற்கும் இடையே 4 அடி அகலம், 18 அடி நீளம் உள்ள சந்து உள்ளது. பிரதிவாதியின் வீடு எந்த திசையை பார்த்து உள்ளது என்றால் கிழக்கு பார்த்தும், வடக்கு பார்த்தும் வாசல்கள் உள்ளது. வாதி வீட்டிற்கும், பிரதிவாதி வீட்டிற்கும் இடையே உள்ள 4 அடி சந்து பாதையை தான் பிரதிவாதி பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. வடக்கும், தெற்கும் உள்ள மாமூல் பாதையைத் தான் பிரதிவாதி பயன்படுத்தி வருகிறார். இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் வந்து அளவீடு செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். அப்போது நான் அங்கு தான் இருந்தேன். நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்த போது இருதரப்பிலும் யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் வாதி மற்றும் பிரதிவாதி, VAO, சர்வேயர் ஆகியோர் இருந்தனர். நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்த போது அரசாங்க கல்லை மையமாக வைத்து தான் அளந்தார்கள் என்றால் சரிதான்.

3. பிரதிவாதியின் வீட்டிற்கும், வாதியின் வீட்டிற்கு இடையே உள்ள சந்து பகுதி குறுக்கே காம்பவுண்ட் சுவர் உள்ள விபரம் தெரியுமா என்றால் காம்பவுண்ட் சுவர் இருந்தது. அதை பிரதிவாதி இடித்து விட்டு பாதை இருப்பதாக கோருகிறார். பிரதிவாதிகள் 4 அடி சந்துப்பாதையை தான் பயன்படுத்தி வந்தார்கள் என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தைப் பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்றாலும், வாதி

**கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை : இல்லை.**

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledge by him/her to be correct

APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.08.06 18:04:22 +0530

District Munsif,
Palani.